Library, Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## PART III EXAMINATION IN BBA/ B.COM 1998/99 – EXTERNAL DEGREE

## PROPER & REPEAT (MARCH 2005)

## BBA/ COM 401 (B) TAXATION

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 02 மணித்தியாலங்கள்

01. திரு. ராம்சே செங்கலடியிலுள்ள புடவைக்கடையொன்றின் உரிமையாளர் ஆவார். அவரது 31.03.2003இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

31.03.2003இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு.

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் கூலிகளும் | | 500,000 | மொத்த இலாபம் | 3000,000 |
| ஊக்குவிப்புக்கள் | | 100,000 | கழி : புரள்வுவரி | 300,000 |
| சேமலாப நிதி | | 80,000 | | 2700,000 |
| சோலைவரி | | 30,000 | தேறிய வட்டி | 144,000 |
| திருத்தச் செலவுகள் | | 25,000 | கென்ரர் விற்பனை இலாபம் | 160,000 |
| காப்புறுதி | | 50,000 | அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் | 8,000 |
| தொ. பேசி கட்டணம் | | 25,000 | | |
| வங்கி வட்டி | | 154,000 | | |
| வாடகை செலுத்தியது | | 36,000 | | |
| பொதிசெய்யும் பொருள் | | 14,000 | | |
| மின்சாரம் | | 50,000 | | |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | | | | |
| கட்டடம் | 200,000 | | | |
| மோட்டார் வாகனம் | 380,000 | | | |
| தளபாடம் | 20,000 | | | |
| | | 600,000 | | |
| உபசரணைச் செலவு | | 50,000 | | |
| நன்கொடை | | 75,000 | | |
| குத்தகை வாடகை | | 240,000 | | |
| வருமானவரி | | 25,000 | | |
| தேறிய இலாபம் | | 958,000 | | |
| | | **3012,000** | | **3012,000** |

## 31.03.2003இல் உள்ளவாறான ஐந்தொகை.

| பொறுப்புகள் | ரூபா | ரூபா | சொத்துக்கள் | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 4000,000 | காணி கட்டடம் | | 2300,000 |
| நடைமுறைக் க/கு | 840,000 | | பொறி இயந்திரம் | | 120,000 |
| கூட்டு: தே. இலாபம் | 958,000 | | மோட்டார் வாகனம் | | 600,000 |
| | 1798,000 | | தளபாடம் | | 90,000 |
| கழி : பற்றுக்கள் | 760,000 | | கடன்பட்டோர் | 550,000 | |
| | | 1038,000 | கழி: அ.மு.க.ஒதுக்கம் | 25,000 | |
| வியாபாரக் கடன் | | 1597,000 | | | 525,000 |
| வங்கிக் கடன் | | 1000,000 | இருப்புக்கள் | | 3500,000 |
| | | | காசு | | 300,000 |
| | | | வங்கி | | 200,000 |
| | | 7635,000 | | | 7635,000 |

குறிப்புகள் :

1. நிலையான சொத்துக்கள்

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி கொள் விலையில் | சேர்த்தல் | விற்பனை | மீதி |
|---|---|---|---|---|
| காணி கட்டடம் | -- | 2500,000 | -- | 2500,000 |
| பொறி இயந்திரம் | 150,000 | -- | -- | 150,000 |
| மோட்டார் வாகனம் | 1500,000 | 600,000 | 500,000 | 1600,000 |
| தளபாடம் | 120,000 | 60,000 | -- | 180,000 |

2. பெறுமானத்தேய்வு ஒதுக்கம்

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி ரூபா | ஏற்பாடு ரூபா | விற்பனை ரூபா | மீதி ரூபா |
|---|---|---|---|---|
| காணி கட்டடம் | -- | 200,000 | -- | 200,000 |
| பொறி இயந்திரம் | 15,000 | 15,000 | -- | 30,000 |
| மோட்டார் வாகனம் | 900,000 | 300,000 | 200,000 | 1000,000 |
| தளபாடம் | 72,000 | 18,000 | -- | 90,000 |

3. இவ்வாண்டில் அவரால் கொள்வனவு செய்யப்பட்ட பழைய கட்டடத்தை இடித்து புதிய கடைக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க ஆரம்பித்தார். பூர்த்தியாகமலுள்ள இக்கட்டடத்தின் நிர்மாணச் செலவு ரூபா. 1000,000/-.

4. பொறி இயந்திரங்கள் 05.04.2000இல் பொருத்தப்பட்ட குளிரூட்டிக்கான செலவைக் குறிக்கின்றது.

1 3 OCT
Eastern University, Sri Lanka

5. மோட்டார் வாகன ஆரம்ப மீதி 1998/ 1999இல் கொள்வனவு செய்த கார் ஒன்றையும், 01.04.2000இல் கொள்வனவு செய்யப்பட்ட கென்ரர் வாகனம் ஒன்றையும் உள்ளடக்குகின்றது.

அவர் 05.06.2002இல் வினியோகத்திற்கு பயன்படுத்தும் கென்ரர் (Canter) வாகனத்தை விற்பனை செய்துவிட்டு புதிய கென்ரர் ஒன்றை 01.10.2002இல் கொள்வனவு செய்தார்.

6. தளபாடம் : ஆரம்பமீதியில் உள்ளடக்கப்பட்ட அனைத்து தளபாடங்களும் 1999 வைகாசி மாதத்தில் நடந்த அவரது திருமணத்தின் போது நன்கொடையாக அவரது பெற்றோரால் வழங்கப்பட்டவையாகும்.

7. அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடன் பட்டோர் க/கு | | 3,000 | மீ/ கீ /வ | | |
| இலாப நட்டக் க/கு | | 8,000 | விசேட ஒதுக்கம் | 6,000 | |
| மீ/ கீ /செ | | | பொது ஒதுக்கம் | 22,000 | |
| விசேட ஒதுக்கம் | 7,000 | | | | 28,000 |
| பொது ஒதுக்கம் | 18,000 | | காசுக் கணக்கு | | 8,000 |
| | | 25,000 | | | |
| | | 36,000 | | | 36,000 |

அ. ஆரம்ப மீதியிலுள்ள விசேட ஒதுக்கம் திரு. கோபாலிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,000/-யும் திரு. நசீரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,000/-யும் உள்ளடக்குகின்றது.

ஆ. பதிவழிப்புக்களில் முன்னாளல் ஊழியர் ஒருவர் காசாகப் பெற்ற ரூபா 1,000/யும் திரு. நாகமணியின் வியாபாரக் கடன் ரூபா 2,000/-யும் உள்ளடக்குகின்றது.

இ. அறவீடுகள் ஏற்கனவே பதிவழிக்கப்பட்ட கடன்கள் தொடர்பாக பெறப்பட்டவை ஆகும்.

ஈ. இறுதி மீதி - விசேடம் - கோபால் 4,000/-
- நசீர் 2,000/-
- சங்கரி 1,000/-

8. சோலைவரியில் 15,000/- வாடகைக்கு பெறப்பட்ட கட்டடத்திற்குரியதாகும்.

9. காப்புறுதி - வியாபார நிலையத்திற்குரியது - 40,000/-
- ஆயுட் காப்புறுதி பிரிமியம் - 10,000/-

10. இவ்வாண்டுக்குரிய விற்பனைப் புரள்வு ரூபா 25,000,000/- ஆகும்.

11. உபசரணைச் செலவில் அவரது பிள்ளையின் பிறந்தநாள் கொண்டாட்டச் செலவு ரூபா. 25,000/- யும் உள்ளடக்கியுள்ளது.

12.

| | ரூபா |
|---|---|
| நன்கொடைகள் - ஜனாதிபதி நிலையத்திற்கு | 50,000/- |
| - அங்கிகரிக்கப்பட்ட அறநிலையம் ஒன்றிற்கு பொருட்களாகக் கொடுத்தது | 25,000/- |
| | 75,000/- |

13. குத்தகை வாடகையானது 01.04.2002 இல் மூன்று வருட ஒப்பந்தமொன்றில் பெறப்பட்ட விநியோக வான் ஒன்றிற்காக செலுத்தப்பட்டதாகும். மாதாந்த வாடகை ரூபா 20,000/- ஆகும்.

திரு. ராம்சே அவர்களின் 2002/ 2003 ஆம் வரிமதிப்பாண்டுக்குரிய வரிவிதி மருமானத்தைக் கணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள்.

(55 புள்ளிகள்)

31.12.2001இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு மாகிர் அவர்கள் வரையறுத்த ABC தனியார் நிறுவனத்தில் விற்பனை முகாமையாளராக வேலை செய்கின்றார்.

31.03.2003 இல் முடிநவடைந்த நிதியாண்டினுள் அவர் பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகளின் விபரம்

| | ரூபா |
|---|---|
| சம்பளம் | 600,000 |
| விடுமுறைக்கால கொடுப்பனவு | 24,000 |
| அரச ஓய்வூதியம் | 120,000 |
| கேளிக்கை கொடுப்பனவு | 50,000 |
| பயணப்படிகள் | 25,000 |

1. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அவரது பங்களிப்பு - 48,000/-
   ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வேலை கொள்பவரது பங்களிப்பு - 72,000/-
2. கேளிக்கைக் கொடுப்பனவில் 50%தை தனது வாடிக்கையாளரை மகிழ்விக்க செலவாகியுள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

3. பயணப்படியில் ரூபா 10,000/- அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளம் வரை பயணம் செய்வதற்கும் மீதி அவரது அலுவலக நோக்கிலான பயணங்களுக்கும் உரியதாகும்.

4. அவரது சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட உ.பொ.செ (PAYE) ரூபா 22,000 /-.

5. அவரது மருத்துவக் காப்புறுதி கட்டணமாக கம்பனியால் மாதாந்தம் ரூபா 1,500/- செலுத்தப்பட்டது.

6. ஏறாவூரில் அமைந்துள்ளதும் 1995இல் அவரால் முடிக்கப்பட்டதுமான வீடொன்றிலிருந்து மாதவாடகைக்கு ரூபா 12,000/- ஐ பெற்றுக்கொண்டுள்ளார். வீட்டின் தளப்பரப்பளவு 1,600 சதுரஅடியாகும்.

சோலைவரி மதிப்பீடு ரூபா. 100,000/-. சோலைவரி 30%இல் செலுத்தப்பட்டது.

7. XY கம்பனியிடமிருந்து தேறிய இலாபமாக ரூபா 87,500/- ஐப் பெற்றுள்ளார்.

பங்கிலாப விபரம் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வரிக்குட்படும் இலாபத்திலிருந்து | 30,000 |
| வரிவிலக்குக்கு உட்படும் இலாபத்திலிருந்து | 20,000 |
| ஏனைய வதிவுள்ள கம்பனிகள் | 18,000 |
| பங்குவிலை கூறப்பட்ட கம்பனிகள் | 22,500 |
| | 90,500 |
| கழி : வரி | (3000) |
| | 87,500 |

8. அவர் கம்பனிக்கு உரித்தான வீட்டில் குடியிருக்கின்றார். கம்பனி மாதாந்தம் 3,000/- ஐ அவரது சம்பளத்திலிருந்து வாடகையாக அறவிடுகின்றது.

9. நிலையான கூட்டுக் கணக்கு ஒன்றிலிருந்து பெற்ற தேறிய வட்டி (தனதும் 10.02.1985 இல் பிறந்த தனது மகனுடையதும்) ரூபா 106,200/-

10. ஏனைய செலவுகள் :

அங்கீகரிக்கப்பட்ட அறநிலையத்திற்கு நன்கொடை ரூ. 20,000/-

கார் கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டி ரூ. 15,000/-

வரிமதிப்பாண்டு 2002/ 2003க்கு திரு. மாகீர் செலுத்த வேண்டிய வரியைக் கணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள்.

**(30 புள்ளிகள்)**

LIBR
1-5-07

. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்கீழ் "வதிவுள்ளவர்"

ii. பெறுமதிசேர் (VAT) வரிச்சட்டத்தின்படி 01.01.2004 இலிருந்து நடைமுறையிலுள்ள வரிவீதங்களைச் சுருக்கமாக விளக்குக.

iii. பெறுமதிசேர் (VAT) வரிக் கணிப்பீட்டின் போது "வழங்கல் பெறுமதி".

iv. பொருளாதார சேவை விதிப்பனவு (Economic Service Charge)

(15 புள்ளிகள்)